**<u>THE COURT OF THE DISTRICT MUNSIF,</u>**
**<u>Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),</u>**
**<u>District Munsif, Arni.</u>**
**<u>E.A.65/2014 in E.P. 4/2013 in RCOP 1/1998</u>**

2026=ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ம் நாள் புதன்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 ஆறுமுகம் வயது 47, த/பெ கிருஷ்ணன்**

**நேரம் - 3.40**

**<u>குறுக்கு விசாரணை</u>**

என் தந்தை பெயர் என்ன என்றால் கிருஷ்ணன், தாயார் பெயர் என்ன என்றால் முனியம்மாள். எனக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். எப்போது எனக்கு திருமணம் நடந்தது என்றால் நவம்பர் மாதம் 1998ம் ஆண்டு தேதி எனக்கு ஞாபகமில்லை. எனக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். என் மகனுக்கு 21 வயது, என் மகளுக்கு 17 வயது ஆகிறது. நான் எத்தனை வருட காலமாக ஆரணியில் வசித்து வருகிறேன் என்றால் 47 வருட காலமாக வசித்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் என்ன விவரம் உள்ளது என்று நான் படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன் என்றால் படித்து காண்பித்தார்கள், அதன் பின்னிட்டு கையொப்பமிட்டேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

2. மனு தாக்கல் செய்யும் சமயம் எனக்கு வயது 33 என்றால் சரிதான். நான் மனு சொத்தில் வாடகைதாரராக இருந்து வருகிறேன் என்று நான் சொல்வது உண்மை என்றால் சரிதான். என் தந்தை கிருஷ்ணன் 25.04.1992 அன்று இறந்து விட்டார் என்றால் சரிதான். என் தந்தை இறந்த போது என் வயது என்ன என்றால் 12 வயதாகும். 12 வயது இருக்கும் சமயத்தில் என்னால் பவுனம்மாள் என்பவரிடம் வாடகை ஒப்பந்தம் போட முடியாது என்றால் சரிதான். 1992 ஆண்டிலிருந்து 2012 வரை உள்ள கால கட்டத்திற்கு நான் வாடகை கொடுத்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவர்களுக்கு ரசீது கொடுக்கும் பழக்கம் இல்லை.

3. பவுனம்மாள் என்னை வாடகைதாரராக ஏற்றுக் கொண்டதற்கான எந்த ஆவணமும் என் வசம் இல்லை என்றால் சரிதான். 1992 ஆண்டிலிருந்து 2014 வரையான கால கட்டத்திற்கு நான் எவ்வளவு வாடகை செலுத்தி உள்ளேன் என்பதை கணக்கிட்டு என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும், மாதம் மாதம் ரூ.150/- செலுத்தி வந்தேன், அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. நான் 1992ம் ஆண்டிலிருந்து 2014 வரையான கால கட்டத்திற்கு வாடகை மாதம் ரூ.150/- செலுத்தி வந்ததற்கான கணக்கு பட்டியலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் என் தந்தை கட்டி வந்த வாடகை ரசீதுகள் அனைத்தும் இருந்தது, என் தந்தை இறந்த பிறகு மேற்படி வாடகை ரசீதுகள் என் வசம் இல்லை. வாய்மொழியாகதான் நான் கணக்கு பட்டியலை சொல்லியுள்ளேன்.

4. என் தந்தை இறந்த கால கட்டத்திற்கு பிறகு நான் வாடகையை எவ்வாறு செலுத்தினேன் என்றாலும், காசோலை மூலமாகவா அல்லது நேரடியாக செலுத்தினேனா என்றால் நேரடியாகதான் செலுத்தினேன், அவர்கள் பதிவேட்டில் குறிப்பிட்டு வைத்திருப்பார்கள். பவுனம்மாள் இறந்த பிறகு யாரிடம் நான் வாடகை செலுத்தினேன் என்றால் அவர்கள் வாரிசுதாரர்களுக்கு பணம் செலுத்த முயன்ற போது அவர்கள் வாங்க மறுத்து விட்டார்கள். எந்த தேதியில் மேற்படி வாடகை பணத்தை நான் செலுத்த முயன்றேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. என் தந்தை இறந்த பின்னர் யாரிடம் நான் வாடகை செலுத்தினேன் என்றால் பவுனம்மாளிடம் கொடுத்தேன்.

5. என் தாயார் முனியம்மாள் RCOP 1/1998 ல் குறுக்கு விசாரணையில் என் கணவர் இறந்த பிறகு என் தம்பி கணேசன்தான் கடையை நடத்தி வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லியிருந்தார் என்றால் தவறு. என் தந்தை இறந்த பிறகு கணேசன்தான் கடையை நடத்தி வந்தார் என்பது உண்மைதானா என்றால் என் அக்கா கடையை பார்த்துக் கொள்வார், அவருடன் அவர் கணவர் கணேசன் இருப்பார், ஆகையால் அவர் அங்கிருந்திருப்பார். RCOP 1/1998 ல் குறுக்கு விசாரணையில் என் தந்தை கிருஷ்ணன் இறந்த பிறகு கணேசன்

என்பவரைதான் பவுனம்மாள் வாடகைதாரராக அங்கீகரித்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

6. நான் தாக்கல் செய்துள்ள **ம.சா.ஆ.3 மற்றும் 4** ஆவணமானது 2012-13 மற்றும் 2013-14 ஆண்டுக்கான பதிவு சான்றிதழ் என்றால் சரிதான். எந்த ஆண்டிலிருந்து பதிவு சான்றிதழை பதிவு செய்ய ஆரம்பித்தேன் என்றால் 1995ல் சொல்லியுள்ளார்கள், ஆனால் அதைப் பற்றி எனக்கு தெரியாது, 2005ல்தான் நான் பதிவு சான்றிதழை பதிவு செய்தேன். நான் 2005ம் ஆண்டிலிருந்து பதிவு சான்றிதழை பதிவு செய்த போது ஏன் 2005லிருந்து 2012 வரை பதிவு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் அப்போது பதிவு சான்றிதழை கையில் தர மாட்டார்கள், அதன் பின்னிட்டு 2012ல் தான் கையில் தர ஆரம்பித்தார்கள். பதிவு சான்றிதழ் பெறும் போது நான் என்னென்ன ஆவணங்களை கொடுத்தேன் என்றால் ஓட்டுரிமை அடையாள அட்டை, புகைப்படம் மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றை கொடுத்தேன்.

7. பதிவு சான்றிதழ் அலுவலகத்தில் வாடகைதாரராக இல்லாமல் பதிவு சான்றிதழ் பெற முடியாது என்றாலும், நான் மோசடியாகதான் மேற்படி பதிவு சான்றிதழை பெற்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள **ம.சா.ஆ.3 மற்றும் 4** ஆவணமானது 2012-13 மற்றும் 2013-14 ஆண்டுக்கான பதிவு சான்றிதழ்கள் வழக்கு தொடர்ந்த பின்னர் பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள **ம.சா.ஆ.6** மின்சார அட்டை பவுனம்மாள் பெயரில் உள்ளது என்றாலும், என் பெயரில் இல்லை என்றாலும் சரிதான். நான் சிண்டிகேட் வங்கியில் கடன் பெற்ற கணக்கு பட்டியலில் ம.சா.ஆ.8ல் எதற்கு கடன் வாங்கினேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, டீக்கடை என்று குறிப்பிட்டுதான் கடன் வாங்கினேன்.

8. நான் தாக்கல் செய்துள்ள **ம.சா.ஆ.1** ஆவணமான அசல் வழக்கு எண்.206/2013 வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடையை காலி செய்யக் கூடாது என்பதற்காக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு 206/2013, 24.11.2025 அன்று எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி அசல் வழக்கு தள்ளுபடி ஆன விவரம் தெரியாமல்தான் நான் மேல் முறையீடு ஆரணி சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளேனா என்றால் அப்போது எனக்கு தெரியாது, அதன் பின்னிட்டு எனக்கு தெரிய வந்தது.

9. என்னிடம் காண்பிக்கப்படும் அசல் வழக்கு எண். 206/2013 வழக்கில் தள்ளுபடியான தீர்ப்பாணை என்றால் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் படித்து காண்பிக்க முயன்ற போது எனக்கு எழுதப் படிக்க தெரியாது என்று கூறினார். அசல் வழக்கு எண். 206/2013ல் கடுமையான அச்சுறுத்தலை எதிர் கொண்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்ன மாதிரியான அச்சுறுத்தலை நான் எதிர் கொண்டேன் என்றால் ஆட்களை வைத்து கடையை காலி செய்ய சொல்லி மிரட்டினார்கள். மேற்படி சம்பவத்திற்கு நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அக்கம் பக்கத்தில் உள்ள கடைக்காரர்களை அழைத்து நாங்களே பேசி முடித்து விட்டோம்.

10. அசல் வழக்கு 206/2013 வழக்கில் நான் சிண்டிகேட் வங்கியில் கடன் பெற்றுள்ளேன் என்றாலும், ஆனால்அதே வழக்கில் வழக்கறிஞர் ஆணையரை நியமித்து அவர் பார்வையிட்ட பிறகு கடையில் உள்ள பொருட்களின் மதிப்பு ரூ.10 ஆயிரம் என குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரிதான், கடையை புதுப்பிக்க செலவு ஆனது. RCOP 1/2014 வழக்கை தாக்கல் செய்து நான் வாடகை செலுத்த முயன்ற போது மேற்படி வழக்கானது 30.08.2022 அன்று தள்ளுபடியானது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் RCOP 1/2014 வழக்கின் தீர்ப்பு நகல் என்றால் எனக்கு கண் பார்வை சரியாக தெரியவில்லை என்று கூறினார். மேற்படி வழக்கின் தீர்ப்பில் எனக்கும், பத்மினி, மைதிலி, சரளா, வாணி ஆகியோர்களுக்கிடையே வாடகை ஒப்பந்தம் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. RCOP 1/2014 மற்றும் அசல் வழக்கு எண்.206/2013 ஆகிய இரண்டு வழக்கு தீர்ப்பிலும் வாடகைதாரராக இருந்தேன் என்பதை நிரூபிக்க தவறி விட்டதால் 2 வழக்கும்

தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். RCOP 1/1998 வழக்கு நடக்கும் சமயத்தில் நான் கடையை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். 1998லிருந்து 2013 வரை எந்த நீதிமன்றத்திலும் நான் வாடகைதாரர் என்று உரிமை கோரி நீதிமன்றத்தை நாடவில்லை என்றால் சரிதான். RCOP 1/1998 வழக்கு தள்ளுபடி ஆன பிறகு கணேசன் என்பவர் மேல் முறையீடு செய்ய RCOP 2/1999 வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கும் கணேசனுக்கு எதிராக 29.04.2004 அன்று தள்ளுபடியானது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

12. CRP 2062/2004 என்ற மனுவின் மீது மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் கணேசன் 6 மாத காலத்திற்குள் கடையை காலி செய்ய வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கணேசன் மேற்படி உத்தரவை பின் பற்றாததால்தான் EP 4/2013 என்ற வழக்கு தொடரப்பட்டது என்றால் இல்லை. EP 4/2013 என்ற வழக்கு எதற்காக தொடரப்பட்டது என்றால் என்னை காலி செய்ய வேண்டும் என்பதற்காக தொடரப்பட்டது. மேற்படி EP 4/2013 மனுவில் கணேசனுக்கு எதிராக எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காததால் 11.07.2013 அன்று மனு அனுமதிக்கப்பட்டது என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. எனக்கு EP 4/2013 என்ற வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு எவ்வாறு தெரிய வந்தது என்றால் நீதிமன்றம் மூலம் கடிதம் கொடுக்கப்பட்ட பின்புதான் எனக்கு தெரிய வந்தது.

13. நான் நடத்தி வரும் டீக்கடைக்கு அமீனா யாரும் வரவில்லையா என்றால் பவுனம்மாளின் வாரிசுதாரர்கள் அடியாட்களை அழைத்து வந்தார்கள், அதன் பின்னிட்டு அமீனாவும் வந்தார்கள். அமீனா சுவாதீனம் எடுக்க வந்த போது நான் மட்டும்தான் இருந்தேனா என்றால் என் அக்கா மற்றும் கணேசன் இருந்தார்களா என்றால் நான் மட்டும்தான் இருந்தேன். 1992லிருந்து யார் கடையை நடத்தி வந்தது என்றால் என் அக்காவும் நானும் நடத்தி வந்தோம், என் கடையில் 13 குமாஸ்தாக்கள் வேலை பார்த்து வந்தார்கள், அதில் 1 குமாஸ்தா நான்

ஆவேன். 1992லிருந்து நானும் என் அக்காவும் கடையை நடத்தி வந்த நிலையில் ஏன் எந்த ஆவணத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் மட்டும்தான் கடையை நடத்தி வந்தேன்.

14. நீதிமன்றத்திலிருந்து அமீனா வந்த போது கணேசன் எங்கிருந்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 1998ம் ஆண்டிலிருந்து 2014 வரை கணேசன்தான் கடையை நடத்தி வந்தார் என்பதற்கு வழக்கை நடத்தி வந்தார் என்றாலும் ஏன் EP 4/2013 மனுவை அவர் நடத்தவில்லை என்றால் எனக்கும் அவருக்கும் பேச்சு வார்த்தை இல்லை, ஆகையால் அவர் நடத்தவில்லை. 1992லிருந்து வாடகைதாரராக நான்தான் கடையை நடத்தி வந்தேன் என்றாலும் ஏன் 1998 முதல் 2014 வரையான வழக்கை நான் நடத்தாமல் கணேசன் நடத்தி வந்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் கணேசனுக்கும் என்ன பிரச்சினை என்றால் அவர் மகளை திருமணம் செய்ய சொல்லி நான் மறுத்ததால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு மன கசப்பு ஏற்பட்டது. எந்த ஆண்டு மேற்படி சம்பவம் நடந்து எங்களுக்கிடையே மன கசப்பு ஏற்பட்டது என்றால் 1995ம் ஆண்டிலிருந்து.

15. நான் தாக்கல் செய்துள்ள EA 65/2014 மனுவை கணேசன் சொல்லிதான் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி மனு சொத்தில் கதவு எண்.144லிருந்து 143A ஆக திருத்தல் செய்ய தாக்கல் செய்யப்பட்ட EA 43/2019 மனுவானது 19.01.2023 அன்று அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். சாட்சி அதன் பின்னிட்டு மீண்டும் கேள்வி கேட்ட பின் அதைப் பற்றி எனக்கு தெரியாது என கூறினார். EA 43/2019 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP 1725/2023 என்ற மனு தாக்கல் செய்தேன் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

16. நான் தாக்கல் செய்த CRP 1725/2023 என்ற மனுவில் கதவு எண்ணை மாற்றக் கூடாது என்று கோரிய மனுவை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம, விசாரணை நீதிமன்றம் உத்தரவு சரி என்று தள்ளுபடி செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி CRP 1725/2023 என்ற மனுவில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவில்

மனுதாரரும், கணேசனும் நெருங்கிய உறவுக்காரர்கள் ஆவர் என்றாலும் நீதிமன்றம் அமீனா சுவாதீனம் எடுக்க வந்த போதுதான் தெரிய வந்தது என்று குறிப்பிட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

17. CRP 1725/2023 என்ற மனுவில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவில் மேற்படி உத்தரவை நாங்கள் தவிர்க்கும் நோக்கத்தில் விசாரணை நீதிமன்றத்தில் EA 65/2014 தாக்கல் செய்தோம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல, ஆகையால் நான் மேற்படி வழக்கை தாக்கல் செய்யவில்லை. Order 21 Rule 97 மனுவை தாக்கல் செய்வதற்கு சுதந்திரமான உரிமை வேண்டும் என்றாலும், எனக்கு என்ன உரிமை உள்ளது என்றால் நான்தான் டீக்கடையை நடத்தி வருவதால் எனக்கு உரிமை உள்ளது. என் தந்தை கிருஷ்ணன் இறந்த பிறகு கடையை நான்தான் நடத்தி வருகிறேன் என்று நான் சொல்லும் நிலையில் கணேசன் தான் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகளை 2014 வரை நடத்தி வந்தார் என்றால் கணேசனின் கூட்டு சதிதான் அது.

18. என்ன கூட்டு சதி என்றால் என்னை கடையில் இருந்து காலி செய்ய வேண்டும் என்ற நோக்கம்தான். யார் யார் கூட்டு சதி செய்து வந்தார்கள் என்றால் கணேசனும், கடை உரிமையாளரும் சேர்ந்து சதி செய்தார்கள். என்ன நோக்கத்திற்காக என் கடையை காலி செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள் என்றால் நான் தொழில் செய்யக் கூடாது என்பதால் அவ்வாறு செய்தார்கள். எந்த வருடத்திலிருந்து மேற்படி சம்பவம் நடந்து வருகிறது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் கணேசன் என்பவருக்கும் அவர் மகளை திருமணம் செய்யாத காரணத்தால் பிரச்சினை ஏற்பட்டதுதான் காரணமா என்றால் எனக்கும் கணேசன் என்பவருக்கும் அதற்கு முன்பே 1995லிருந்தே மனக் கசப்பு உள்ளது.

19. அசல் வழக்கு எண்.206/2013 என்ற வழக்கின் வாதுரையில் கணேசன் மகளை திருமணம் செய்யாமல் நான் காதல் திருமணம் செய்து கொண்டதால் கணேசனும், கடை உரிமையாளர்களும் என்னை அச்சுறுத்தியதால்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் 1998ம் ஆண்டு

நடைப்பெற்றது என்றாலும், அப்போது நடந்த அச்சுறுத்தலுக்கு ஏன் 2013ம் ஆண்டு வழக்கை தொடர்ந்தேன் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. கணேசனுக்கும் எனக்கும் நல்ல உறவுமுறைதான் உள்ளது என்றாலும், EA 65/2014 மனுவை கணேசன் சொல்லிதான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மனுவிலிருந்து கணேசனை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில்தான் தாக்கல் செய்தேன் என்றால் இல்லை.

20. நான் இந்நீதிமன்றத்தில் ம.சா.ஆ.1 முதல் 18 வரையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன், அதில் ஏதாவது ஒரு ஆவணத்தில் நான் எனக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே வாடகை ஒப்பந்தம் போடப்பட்டு வாடகைதாரராக நான் இருந்தேன் என்பதை நிரூபிக்க ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் வாடகை ரசீது, வாடகைதாரருக்கான ஒப்பந்தம், 1992 முதல் 2012 வரை எந்த ஒரு ஆவணமும் வாடகைதாரர் என நிரூபிக்க இல்லை என்றால் சரிதான். தடை உத்தரவு கோரி தாக்கல் செய்த மனுவை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது எப்படி நீங்கள் சொல்ல முடியும் என்று சாட்சி கூறினார்.

**எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க தொடர்ச்சிக்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் 5.35**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni